**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 நவம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்காமை காரணமாக அதில் ஏசீஏ 2(ii) பதிவத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,291,439,650 ஆன சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் ரூபா 1,329,379,609 ஆக ரூபா 37,939,959 தொகை அதிகரித்தும், ரூபா 639,600,165 ஆன ஏனைய பொருட்கள் மற்றும் சேவை செலவினம் ரூபா 601,660,206 ஆக ரூபா 37,939,959 குறைத்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தவறினால் குறிப்பு இலக்கம் 06 இல் உள்ளடக்க வேண்டிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் மொத்த மீண்டெழும் செலவினத்தில் வேறுபாடுகள் ஏற்படவில்லை. இது 2024 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்து இணக்கம் செய்யப்பட்ட தரவுகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் அந்தந்த செலவினங்கள் சரியான தொகுதியின் கீழ் காண்பித்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கின் படிவம் 03 இல் தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொறுப்பில் பல வருட கால முதல் கொண்டுவரப்படுகின்ற குறித்துரைத்த இணங்காணப்படாத ரூபா 268,265 அறவிட வேண்டிய மீதியாக இருந்தது. | இனங்காணப்படாத இந்த மீதி தொடர்பாக திறைசேரியில் இருந்து விசாரணை செய்து எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக இருந்த கடன் மீதியை இணங்கண்டு தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவாக அறவிடல் வேண்டும். |

**(இ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதிப்பிரமாணம் 109 கீழ் வருகின்ற ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 698,025 ஆன நட்டம் மற்றும் கைவிடல்கள், இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | முன்னிருந்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இந்த நட்டம் எதிர்காலத்தில் பரீட்சித்து இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும், இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும், சரியாகவும் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திலிருந்து விநியோகதிக்கப்பட்ட செலவின முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையில் விதிக்கப்பட்டிருந்த செலவின எல்லை கடந்த ஆண்டில் நீண்ட காலமாக காணப்பட்ட அதிக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமானவரை சரியாக |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 50 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | மழையின் காரணமாக வீதிகளைப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியாமையினால் இது ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட வேண்யதாக குறிப்பிட்ட சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் பூந்தல தேசிய பூங்காவினை பார்வையிடுவதற்கான நிலையத்தை திருத்தும் பணிகளுக்காக திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 9,897,160 ஆன நிதியேற்பாட்டில் 85.9 சதவீதமான ரூபா 8,502,160 அந்தப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் ஆண்டின் இறுதியில் அந்த அமைச்சுக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. | இதற்காக திணைக்கள பெறுகைக் குழு ஊடாக கேள்வி கோரி 2023 ஒக்தோபர் மாதம் 13 ஆம் திகதி கேள்வி கையளித்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறு 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட அதிக மழையின் காரணமாக இதன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது. | ஏனைய அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை திட்டமிடப்பட்ட பிரகாரம் மற்றும் செயற்திறனாக பயன்படுத்தி உரிய பணிகளை குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) 2009 இன் 22 ஆம் இலக்க கால்நடை மற்றும் தாவர பாதுகாப்பு (திருத்த) சட்டம் | | | | |
| i. 4 ஆம் பிரிவு | | ஒவ்வொரு இயற்கை ஒதுக்கம் மற்றும் புனித பூமிகளுக்காக செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்து ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருதடவை அதனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மிரிஸ்ஸ, கல்பிட்டி, ஹிக்கடுவ என்ற கடல்சார் ஒதுக்கப் பிரதேசம் மற்றும் மாந்து கங்க புனித பூமிகளுக்காக அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு திணைக்களப் படிவத்தின் பிரகாரம் முகாமைத்துவ திட்டம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது . | சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு இயற்கை ஒதுக்கப் பிரதேசம் மற்றும் புனித பூமிகளுக்காக செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| ii. 14 ஆம் பிரிவு | | ஏதாவது தேசிய ஒதுக்க நிலப் பிரதேசத்தின் எல்லையிலிருந்து 01 மைல் தூரத்தில் உள்ளடங்கிய தனியார் அல்லது அரசாங்கத்தின் அல்லது ஏதாவது நபர் ஒருவருக்கு அமைப்பொன்றினால் பணிப்பாளர் நாயகத்தின் முன்னெழுத்து அங்கீகாரமின்றி எந்தவொரு முறையிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் | ஹிக்கடுவ பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது இந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக முன்மொழிவு ஒன்று பூங்கா பொறுப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் கரையோரப் பாதுகாப்புத் | சட்டத்தின் பிரகாரம் கடல்சார் பூங்காவிற்குரிய கரையோர வலையத்தைத சரியான மேற்பார்வையுடன் பாதுகாத்துக் கொள்வதற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் அவ்வாறான எழுத்துமூல அனுமதியின்றி ஹிக்கடுவ கடல்சார் பூங்காவில் உள்நுழைவுவீதியை தடைசெய்யும் வகையில் மற்றும் கடல்சார் பூங்காவிற்குரிய கரையோர வலையத்தில் அனுமதியற்ற வியாபார நிலையங்கள் மற்றும் சுற்றுலா ஓய்வு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | திணைக்கம் மற்றும் ஹிக்கடுவ நகர சபைக்கு அந்ந அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அதிலுள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் | மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 84 உத்தியோகத்தரிமிருந்து அறவிடவேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,580,671 கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | ரூபா 113,380 ஆன கடன் மீதியை பதிவழிப்பதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் அறவிடவேண்டிய கடன் மீதி தொடர்பாக பிரதேச செயலாளரிடமிருந்து உரிமையாளர்கள் தொடர்பாக மற்றும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெறப்பட்டு தேவையான மிகுதி நடவக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவையாக இருந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் II | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் 15 சதவீதத்தால் உயர்த்த வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டு முதல் | கடல்சார் ஒதுக்கப் பிரதேசத்தில் பார்வையிடும் படகைப் பதிவு செய்யும் கட்டணத்தை திருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட வர்த்தமானிப் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணம் திருத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதியின் 05 ஆம் பந்தி | 2023 ஆண்டின் இறுதி வரையில் 11 வருடங்கள் கடந்திருந்த படகு பதிவு செய்யும் கட்டணத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பத்திரத்தின் சட்ட வரைவு வழங்கலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 06 ஆம் பந்தி | நட்டம் மற்றும் இழப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,662,317 ஆன நட்டம் மற்றும் இழப்புக்கள் 10 நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (II) படிவத்தில் பத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பாக கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | இந்த நட்ட இழப்பு முன்னைய ஆண்டுகளிலிருந்து நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாதிருந்த துடன் எதிர்காலத்தில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2012 செப்தெம்பர் 06 ஆம் திகதிய 1774/27 என்ற அதிவிசேட வர்த்தமாணி பத்திரத்தின் 12 ஆம் கட்டளை | கடல்வாழ் உயிரினங்களின் அவதானிப்புக்களுக்காக கடலுக்குச் செல்கின்ற ஒவ்வொரு பிரயாணிகளுக்கும் திணைக்களத்தால் பயிற்சியழிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வழிகாட்டி ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும் மிரிஸ்ஸ திமிங்கிலத்தை பார்வையிடுவதற்காக கப்பலில் செல்கின்றவர்களுக்கு படகுகளில் அவ்வாறான வழிகாட்டி ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் வழிகாட்டி அல்லது உதவியாளர் ஒருவர் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துமாறு வலய உதவிப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானி கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 7,094,700 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் 33 பணிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மின்சார வேலி தூண் கொங்கிரீட் செய்யும் செயற்திட்டமாக அமுல்படுத்தும் தேவையில்லாமை மற்றும் சங்கத்தின் மூலம் உரிய பணிகள் நிறைவேற்றப்படுவதில்லை என அறிவித்தமை இதற்கான காரணமாகும். | தேவைகளை இணங்கண்டு சரியான திட்டமிடலுடன் வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டங்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரிட்டிகல வனசிவராசிகள் அலுவலகத்தில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட கொட்டகை ஒன்று பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி ரூபா 2,818,200 ஆன 154 கம்பி உருளைகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 122 nut & bolt கள்வரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கள்வர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் மற்றும் அவ்வாறு ஏற்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று அநுராதபுர வனசிவராசிகள் வலயத்தில் உதவிப் பணிப்பாளரின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்படுகின்றது. | விசாரணை நடைவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து இந்த நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாது கங்கை புனித பூமியாக பகிரங்கப்படுத்துவதற்குரிய 2006 யூலை 17 ஆம் திகதி இலக்கம் 1454/7 என்ற அதிவிசேட வர்த்தமாணிப் பத்திரத்தில் அதில் காலிப் பிரதேசத்தில் காணப்படுகின்றமையான தவறை சரிசெய்து சரியான எல்லையை அடையாளம் இடுவதற்கும் புனித பூமியை சரியாக வரைபடம் இடுவதற்கும் மீளாய்வாண்டின் இறுதிரையிலும் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாது கங்கை பார்வையிடுவதற்காக வருகைதருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் நுழைவுச்சீட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாது கங்கை புனித பூமி வர்த்தமாணி மூலம் வெளியிடும் போது ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வழுக்களை சரி செய்து புதிய எல்லையுடன் வர்த்தமானி அறிவித்தல் திருத்துதல் 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே மாதுகங்க தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்படாமையினால் கட்டணம் ஒன்று குறிப்பிடத் தீர்மானிப்பதற்கு முடியாதிருந்த போதும் அடுத்த கட்டண திருத்தங்களின் போது சுற்றுலா செல்பவர்களுக்கான கட்டணம் அறவிடுதல் அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதுகங்க புனித பூமியின் எல்லையினை சரியாக வரைபடம் இடுவதற்கும் அதனை தேசிய பூங்காவாக தரம் உயர்த்தி கட்டணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 யூன் 30 வரையான காலத்தில் ஹிக்கடுவ கடல்சார் பூங்கா பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகளிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த நுழைவுச் சீட்டுக்கட்டணம் ரூபா 2,226,915 மற்றும் செல்கைக் கட்டணம் ரூபா 2,761,362 ஆனமையால் நுழைவுக் கட்டணத்தை விட ரூபா 534,447 இனால் சேவைக்கட்டணம் | ஹிக்கடுவ தேசிய பூங்காவில் சேவைக்கட்டணம் அறவிடும் குழுவினை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒருநபருக்காக அறவிடுவதற்காக காணப்படுகின்ற மிகவும் உச்ச தீர்வாக இருந்ததாக பூங்கா பொறுப்பாளர் சுட்டிக்காட்டியிருந்ததுடன் | சுற்றுலாப் பிரயாணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணத்திற்கு சமமான சேவை ஒன்றை வழங்குவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்திருந்த போதிலும் திணைக்களத்தால் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அது தொடர்பாக கவனத்தில் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | உடவளவ மற்றும் யால சரணாலயங்களில் உள்ள சுற்றுலா விடுதிகளில் குடிநீர் காணப்படாமை சூரியவலு மூலம் வழங்கப்படுகின்ற மின்சாரம் சுற்றுலா விடுதிகளின் சராசரி மின்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவில் இல்லாமை, தளபாடப் பொருட்கள் மிகவும் பழைய நிலைமையில் காணப்படுகின்றமை, சுற்றுலா விடுதிகளின் கடமை நடவடிக்கைகள் உரிய பயிற்சி பெறாத தொண்டர் வழிகாட்டிகளினால் மேற்கொள்ளப்படுதல் மற்றும் சுற்றுலா விடுதிகள் முழுமையாக நவீன மயப்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற ரீதியில் சுற்றுலா விடுதிகளில் குறைபாடுகள் காணப்பட்டமையால் சவாரி ஜீப் வண்டிகள் குறித்துரைத்தவாறு ஒழுங்கு முறைப்படுத்தாமையினால் காணப்படுகின்ற பிரச்சினைகள் சுற்றுலாவினை கவர்ச்சிகரமாக்குவது தொடர்பில் பாதகமான முறையில் தாக்கம் அளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது சில சுற்றுலா விடுதிகள் சூரியகல மின்பிறப்பாக்கிகளை பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்ட சூரியவலு முறைமை போதியளவில் இல்லாத சுற்றுலா விடுகளுக்காக புதிய சூரியவலு முறைமையை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குடிநீர் வழங்குவதற்கு பூங்கா நுழைவாயிக்கு அண்மையில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றுலாத் துறையின் கவர்ச்சியினை அதிகரிக்கும் வகையில் சகல சுற்றுலா சேவைகளையும் உயர்தரத்தினை உடையதாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் போது மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 58,640,147 மற்றும் அதன் பராமரிப்புக்காக ரூபா 14,433,552 தொகையும் உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் | கணிசமான அளவில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாக யானைகள் வாழுகின்ற நிலம் உரித்தற்றுப் போனமை, | யானை மனித பிரச்சனைகளை குறைப்பதற்காக பொருத்தமான உபாய வலைகளை அறிமுகப்படுத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரையான காலத்தில் மாத்திரம் மின்சார வேலிக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 2,355,882,248 ஆக இருந்ததுடன் 2023 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரை மின்சார வேலியின் மொத்த நீள அளவு கிலோமீற்றர் 5,389.97 ஆகும். எனினும் கடந்த 05 வருடகாலத்தில் இடம்பெற்ற யானை மரணம், மனித இறப்புக்கள் மற்றும் ஆதனங்களுக்கான சேதங்களை கவணத்தில் கொள்ளும் போது மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்ட போதும் அது யானை மனித பிரச்சனைகளை குறைக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | யானைகள் நடமாடித் திரிகின்ற பிரதேசங்கள் மற்றும் அதற்கு அருகில் உள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்ற காணி பயன்பாடு, மனிதர்களின் கவனமின்மை, ஒதுக்கப் பிரதேசங்களுக்கு அண்மையில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளுக்காக யானைகள் கவரப்படுதல் மற்றும் வீடுகளில் நெல் களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்களினால் ஆதனங்களுக்கு இழப்பு மற்றும் உடல் ரீதியான பாதிப்புக்களும் அதிகரித்திருந்தது. | தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தப்போக புனித பூமியில் 315 ஹெக்ரேயர் களப்பு அந்தர அகற்றப்பட்டு வாசஸ்தலம் ஒன்றை அமைப்பதற்காக ரூபா 57,401,665 தொகையும், அகற்றப்பட்ட பிரதேசங்களை பராமரிப்பதற்காக ரூபா 5,865,900 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணிசமான நிலப்பிரதேசத்தில் களப்பு அந்தர பரவியிருந்தது. இதன் காரணமாக யானைகளுக்கு பாதுகாப்புப் பிரதேசங்களில் இருப்பதற்கு வசதியீனமாக இருந்து அவைகள் 50 கிலோமீற்றர் அளவிலான தூரப் பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்கின்றமை அவதானிக்கப்பட்டது. | பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக முறையான விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டு அதன் பரிந்துரைகளின் பிரகாரம் மிகுதி களப்பு அந்தர அகற்றுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பரவுகின்ற தாவரங்களை அகற்றுவதற்காக முறையான திட்டமுறைமையெ ான்றை அறிமுகப்படுத்தி அதனை பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,891 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சிரேஸ்ட நிலையில் 37 வெற்றிடங்களை உள்ளடக்கிய திணைக்களத்தில் 977 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் மூலம் ஆட்சேர்ப்புக்கள் அதிகளவில் வரையறுக்கப்பட்டமையால் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்ததுடன் ஆட்சேர்தல்களை மீளாய்வுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கையின் அடிப்படையில் சேர்ப்பதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளமையும் அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | செயலாற்றல்களுக் காக பாதகமாக தாக்கமளிக்கின்ற அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பி திணைக்களத்தின் நடவடிக்கைகளை சரியான முறையில் பேணிச்செல்ல நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |